00001

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள்சார் கல்வியில் சிறப்புகல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப்பரீட்சை

மட்டம் - 06

**SNU6221/ESU4121– ஆரம்பக் கல்வி**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 01.03.2025 நேரம்: பி.ப 01.30 - பி.ப 04.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. ஜீன் ஐக் ரூஸோவின் ஆரம்பக் கல்வி பற்றிய கருத்துக்களைச் சுருக்கமாக விளக்குக.

2. இலங்கையின் ஆரம்பக் கல்வி மட்டத்தில் காணப்படும் ஆரம்ப மட்டக் கல்வியின் பிரதான காரணிகள் மூன்றினை (03) அட்டவணைப்படுத்துக.

3. 1997ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட ஆரம்பக் கல்வி சீர்திருத்தத்தில் அறிமுகம் செய்யப்பட்ட மூன்று (03) கற்றல் கூறுகளைப் பெயரிடுக. இக்கூறுகள் எவ்வாறு முதன்மை நிலைகளில் மாற்றமடைகின்றனவென வரிப்படத்தின் உதவியுடன் விளக்குக.

4. ஆரம்பப் பாடசாலைகளில் பிள்ளைகள் எவ்வாறு கற்கின்றனரெனச் சுருக்கமாக கலந்துரையாடுக.

5. கலைத்திட்ட முகாமைத்துவத்தில் ஆரம்ப பாடசாலை ஆசிரியர் கவனத்திலெடுக்க வேண்டிய பிரதான காரணிகளை பட்டியலிடுக.

6. பாடசாலை அடிப்படையிலான கணிப்பீட்டு செயல்முறைக்குரிய 'கணிப்பீடு' என்னும் பதத்தினை வரையறுக்குக.

7. சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களின் வகிபங்குச் செயற்பாடு இரண்டினைக் (02) குறிப்பிடுக.

8. 'ஆரம்பக் கல்வி' என்னும் எண்ணக்கருவினை விபரிக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. i. ஆரம்பக் கல்வியின் தத்துவார்த்த அடிப்படைகளைக் குறிப்பிடுக.

**(10 புள்ளிகள்)**

ii. இலங்கையின் ஆரம்பக் கல்வியினை முன்னேற்றுவதில் யுனெஸ்கோவின் (UNESCO) பங்களிப்பினை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**10.** "இலங்கையில் 4.2 மில்லியன் மாணவர்கள் உள்ளனர். இம்மாணவர்கள் ஐந்து (5) வருடங்களுக்கு மேலாகவும் பதினெட்டு (18) வருடங்களுக்கு உட்பட்டவர்களாகவும் உள்ளனர்."

**i.** இலங்கையில் உள்ள பாடசாலை மாணவர்களை வகுப்பின் அடிப்படையில் எவ்வாறு உப பிரிவினராக வகுக்க முடியும்

**(05 புள்ளிகள்)**

**ii.** இலங்கையில் ஆரம்பக் கல்வி எதிர்நோக்கும் சவால்களைப் பட்டியலிடுக.

**(05 புள்ளிகள்)**

**iii.** மேலே பகுதி (ஆ) இல் நீங்கள் குறிப்பிட்ட சவால்களில் ஏதாவது **மூன்று** (03) சவால்களைத் தெரிவு செய்து அவற்றிலிருந்து விடுபடுவதற்கும் பொருத்தமான தீர்வுகளை சிபாரிசு செய்க.

**(10 புள்ளிகள்)**

**11. i.** 1992 ஆம் ஆண்டு தேசிய கல்வி ஆணைக்குழுவினரால் குறிப்பிடப்பட்ட **ஒன்பது** (09) தேசிய இலக்குகளைப் பட்டியலிடுக.

**(07 புள்ளிகள்)**

**ii.** "தேர்ச்சி" என்னும் பத்தினால் நீங்கள் விளங்கிக் கொள்வது யாது?

**(08 புள்ளிகள்)**

**iii.** 'பிள்ளை மையக் கல்வி' ஆசிரியர் மையக் கல்வி ஆகிய பதங்களை எவ்வாறு வேறுபடுத்திக் காட்டுவீர்?

**(05 புள்ளிகள்)**

**12. i.** ஆரம்பப் பிரிவுப் பிள்ளைகளின் விருத்தி இயல்புகளை விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** ஆரம்ப வகுப்புப் பிள்ளைகள் எவ்வாறு கற்கின்றனர் எனக் கலந்துரையாடுக.

**(07 புள்ளிகள்)**

**iii.** ஆரம்ப வகுப்புப் பிள்ளைகளின் கற்றலுக்குத் துணைபுரியும் காரணிகளை விமர்சிக்குக.

**(08 புள்ளிகள்)**

**13. i.** ஆரம்ப வகுப்பு ஆசிரியர் கலைத்திட்டத்தினை முகாமை செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய பிரதான காரணிகளை விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** வளங்களை முகாமை செய்பவராக ஆரம்ப வகுப்பு ஆசிரியரின் வகிபங்கினைச் சுருக்கமாக விமர்சிக்குக.

**(07 புள்ளிகள்)**

**iii.** ஆரம்ப வகுப்பு ஆசிரியரொருவர் எவ்வாறு வீட்டுக்கும் பாடசாலைக்குமிடையிலான சிறந்த தொடர்பினை பேணமுடியும்?

**(08 புள்ளிகள்)**

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*